

வேலூர் மாவட்டம் காட்பாடியில் கலைஞரின் கனவு இல்லம் கட்ட300பேருக்கு கட்டிட ஆணைகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, ஊராட்சி குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழுதலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு தலைவர் தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி குன்னம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மாவட்ட நூலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

### தென்காசி மாவட்டம் – குற்றாலம் பேரூராட்சி

# கலைவாணர் அரங்கில் குற்றாலம் சாரல் திருவிழா!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சிறப்புரை! வே.ஜெயபாலன் - ஈ.ராஜா - ராணிஸ்ரீகுமார் - சதன் திருமலைக்குமார் பங்கேற்பு!

தென்காசி.ஆக.22.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கில் குற்றாலம் சாரல் திருவிழா 16.08.24 ல் இருந்து 19.08.24 வரை 4 நாட்கள் நடைபெற்றது.

நான்காம் நாள் நடைபெற்ற நிறைவு விழா வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர்சீ.ஜெயச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் சாரல் திருவிழாவில் நடைபெற்ற மரத்தான் போட்டி சிறுதானிய உணவு திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், நன்கொடையாளர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கி பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் குறிப்பாக சுற்றுலாத்துறை ஒரு முன்னுரிமை பெற்ற துறையாகச் செயல்பட ஆரம்பித்தது.தமிழகத்திலுள்ள சுற்றுலா வளங்களை உலகில் பல பகுதிகளிலும் தெரியும் வண்ணம் விளம்பரங்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், என்றும் உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து அடிப்படை வசதிகளை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சுற்றுலாத்துறைக்கு கூடுதல் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.இதனால் தமிழக சுற்றுலாத்துறையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக தனது பணிகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறப்புமிக்க கோயில்கள், கோட்டை கொத்தளங் கள்,தமிழகத்தின் சிறப்பைப் பறைசாற்றும் பாரம்பரிய மிக்க திராவிட கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை.எழில் கொஞ்சும் இயற்கை சூழல் மிக்க மலை வாழிடங்கள்,வனவிலங்கு சரணாலயங்கள்,உலகப்புகழ் பெற்ற அழகான கடற்கரை அனைத்து சாகச் சுற்றுலாவினை நடத்த தேவையான அமைப்புகள், முகில்முட்டும் சிகரங்கள் அதில் இருந்து உருவாகி வரும் அருவிகள், கடல் தாவர மற்றும் உயிரினங்கள் முதலான சுற்றுலாச் சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி குறித்து நமது முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை ஆசிய சுற்றுலாவில் ஒரு அச்சாணியாகவும் சென்னையை தென்னிந்திய சுற்றுலாவிற்கு நுழைவாயிலாகவும் இன்னும் மேம்படுத்த வேண்டும் என்ற தொலை நோக்குடன் சுற்றுலாவிற்கு அதிக முக்கியத்துவமும், அதிக நிதி உதவியும் ஆக்கபூர்மான ஆலோசனைகளும் வழங்கி வருகிறார்கள்.

“தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023” என்ற கொள்கை வெளியிட்டு, “சுற்றுலாத்துறையில் புதிய உச்சத்தை அடைவதை நோக்கமாக கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியாக,நமது மாநிலத்திற்கான முதலாவது சுற்றுலாக் கொள்கையை வெளியிடுவதில் மிக்க பெருமை அடைகிறேன்.என்று தெரிவித்துள்ளார்.

தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா,மண்டல கலை பண்பாட்டு மையம் திருநெல்வேலி உதவி இயக்குநர் வ.கோபாலகிருஷ்ணன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) அ.வில்லியம் ஜேசுதாஸ். மாவட்ட சுற்றுலா அலுவலர் க.சீனிவாசன், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா அமர் சேவா சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன், மாவட்ட அமைத்தலைவர் சுந்தரம் மகாலிங்கம் மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி,மாவட்ட பொருளாளர் ஷெரிப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை,சேக் தாவுது, ஆறுமுகச்சாமி,பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை,ரஹீம், தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், சீனித்துரை, வல்லம் திவான் ஒலி,ரவிசங்கர் ஜெயக்குமார்,மகேஷ் மாயவன், சுரேஷ்,நகர செயலாளர் சாதிர் அப்பாஸ், பேரூர் செயலாளர்கள் குட்டி முத்தையா பண்டாரம் முத்து ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென்காசி)திவ்யா மணிகண்டன்(ஆலங்குளம்)பொன் முத்தையா பாண்டியன் (வாசுதேவநல்லூர்) கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான்,அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா,கே.என்.எல். சுப்பையா,இசக்கிபாண்டியன், முருகன்,வீராணம் சேக் முகமது, ரமேஷ்,கருப்பணன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள்,சுற்றுலா பயணிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


### மயிலாடுதுறை மாவட்டத்தில்

### ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் !

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு !



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டணைப்படி அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக அவைத்தலைவர்கள் தலைமையிலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கலந்துக்கொள்ள உள்ளனர். இந்த கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தை சேர்ந்த மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் & நேரம் | ஒன்றிய, நகர, பேரூர் | இடம் |
|---|---|---|
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியம் | அறிஞர் அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோவில். |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணி | மயிலாடுதுறை நகரம் | விஜய் மஹால், மயிலாடுதுறை |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 6.00 மணி | சீர்காழி மேற்கு ஒன்றியம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 26.08.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணி | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | ஸ்ரீமதி திருமண மஹால் – கோமல் |
| 26.08.2024 திங்கட்கிழமை மாலை 3.00 மணி | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | பத்மவாசன் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |
| 27.08.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் | அமிர்தயோகா மஹால் திருக்கடையூர், |
| 27.08.2024 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | பி.எம்.எஸ். திருமணமண்டபம், மங்கைநல்லூர், |
| 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணி | சீர்காழி கிழக்கு ஒன்றியம் | அங்காளபரமேஸ்வரி மண்டபம் சரபோஜி அக்ரஹாரம், சீர்காழி, |
| 28.08.2024 புதன்கிழமை மாலை 4.00 மணி | கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | அருண்பாலாஜி திருமண மண்டபம், கொள்ளிடம். |
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் | ரமாட்டி திருமண மண்டபம், இலுப்பூர் சங்கரன்பந்தல் |
| 29.08.2024 வியாழக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் வடக்கு ஒன்றியம் | ஒன்றிய தி.மு.க அலுவலகம், குத்தாலம், |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | நாராயணி மஹால், மயிலாடுதுறை. |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி | சீர்காழி நகரம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க.அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | நிலவர் திருமண மண்டபம், மணல்மேடு, |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் பேரூர் | குத்தாலம் ஒன்றிய தி.மு.க அலுவலகம், |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணி | கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | ஆர்.எம்.ஆர்.திருமண மண்டபம், கடவாசல். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | அருண்மஹால், நல்லத்துக்குடி, |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி | வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் | காவியா திருமண மண்டபம், வைத்தீஸ்வரன்கோவில். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி | தரங்கை பேரூர் | சீனிவாசா திருமணமண்டபம், பொறையார். |
| 02.09.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணி | மணல்மேடு பேரூர் | நிலவர் திருமணமண்டபம், மணல்மேடு, |

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முறையாக கூட்டம் அழைப்பிதழ்களை அச்சிட்டு கிளை, வார்டுகள் தோறும் வழங்கி கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ள கூட்டம் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.


### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா:

# மதுரை கிழக்கு தொகுதியில் மாபெரும் மாட்டுவண்டி - குதிரை வண்டி பந்தயம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில்!

மதுரை, ஆக. 22-

மதுரை கிழக்கு தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் வரும் 25ஆம் தேதி மாபெரும் மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி பந்தயம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது, அதன் விபரம்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், நாடு போற்றும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி தி.மு.க. சார்பில் வரும் 25.08.2024ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு, மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி தலைமையில் ஊமச்சிகுளம் மதுரை நத்தம் சாலையில் மாபெரும் மாட்டு வண்டி பந்தயம் மற்றும் மாபெரும் குதிரை வண்டி பந்தயம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் வாழ்த்துரை வழங்க உள்ளார். கழக நிர்வாகிகள் சி.நேருபாண்டியன், ஜி.பி. ராஜா, கரு.தியாகராஜன், ஆர்.வடிவேல் முருகன், சூர்யா கலா கலாநிதி, எஸ். வாசுகி சசிகுமார், ப. வீரராகவன், ஆர்.மணி மேகலை, எ.பஞ்சு, எம். ஆர்.எம். பாலசுப்பிரமணியன், வ.ஆசைக் கண்ணன், ம.சோமசுந்தர பாண்டியன், ரோகினி பொம்மதேவன், எ.சேகர், அ.பா.ரகுபதி, எஸ். மதிவாணன், எஸ்.அப்துல் காதர், எ.ஹக்கீம், எ.மருது பாண்டியன், பெ.சசி குமார், கௌரிசங்கர், எம். பாண்டியராஜன், பி.ரவிச்சந்திரன், கே.பி. பூமிநாதன், ஜெயக்குமார், பி.அழகு பாண்டி, அம்மன் ஸ்டீல் எஸ்.இருளப்பன், வி.சீமான்ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்

மதுரை மேற்கு ஒன்றியம் (வடக்கு) செயலாளர் சி. சிறைச்செல்வன் வரவேற்புரை நிகழ்த்த உள்ளார்.

பெரிய மாட்டு வண்டிப் போட்டியில் முதல் பரிசாக 2 லட்சத்து 101 ரொக்க பணம் வழங்கப்பட உள்ளது, இரண்டாவது பரிசாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்து 101 ரொக்க பணமும், மூன்றாம் பரிசாக ரூபாய் ஒரு லட்சத்து 101 பரிசாக வழங்கப்பட உள்ளது.

இதேபோல் சின்ன மாட்டு வண்டி பந்தயத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப் பணம் மற்றும் பரிசு கோப்பை வழங்கப்பட உள்ளது.

மேலும் போட்டியில் பங்கேற்கும் பெரிய குதிரைவண்டி பந்தயத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 40 ஆயிரத்து 101ம், இரண்டாம் பரிசாக ரூபாய் 30 ஆயிரத்து 101ம், மூன்றாம் பரிசாக ரூபாய் 20ஆயிரத்து 101ம், நான்காம் பரிசாக ரூபாய் 10ஆயிரத்து 101 மற்றும் பரிசு கோப்பை வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செய லாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர், பொதுமக்கள் என பெரும் திரளாக பங்கேற்க உள்ளார்கள்.

மேலும் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் என். கார்த்திக் ராஜா, எஸ். ஆதிசங்கர், ஆர். நாகேந்திரன் என்ற ராஜேஷ் ஆகியோர் நன்றியுரையாற்ற உள்ளனர். மதுரை கிழக்கு சட்டமன்ற தி.மு.க. சார்பில் நடைபெறும் இப்போட்டிகளில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து போட்டியாளர்கள் பங்கேற்க உள்ளனர்

# காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய கழக கூட்டம்!

காஞ்சிபுரம், ஆக.22-

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் கீழ்ஆம்பி ஏ.ஜெ.எஸ். திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.எம். குமார் வரவேற்பிலும் ஒன்றிய அவை தலைவர் எஸ். மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.


மாவட்ட கழக துணை செயலாளர் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க. செல்வம், கழக மாணவர் அணி செயலாளர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மலர்கொடி குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் இரா.நெடுஞ்செழியன், எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி, ரா.ஜே. சேகர், ஒன்றிய பொருளாளர் அ.வேலுச் சாமி, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார், பி.என்.ரவி, நா.கருணாகரன் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பூத் முகவர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மே.சு. சண்முகசுந்தரம்

### ஆகஸ்ட் 22 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.

1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.

அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**